பக்கங்கள் 18 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 31 வியாழக்கிழமை 17.10.2024 | அதிர்வு 77

## பஸ் தரிப்பிடத்தில் பெண்ணின் சடலம்

(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் இருந்து அடையாளம் தெரியாத பெண்ணொருவரின் சடலம் இன்று வியாழக்கிழமை காலை மீட்கப்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அனுபவம் உள்ளவர்களையே நாடாளுமன்றம் அனுப்புங்கள்

## மக்களிடம் ரணில் வேண்டுகோள்

இலங்கை தொடர்ந்தும் சவால்களை எதிர்நோக்கி வரும் நிலையில் பொருளாதார நெருக்கடிகளை நிர்வகிப்பதில் அனுபவம் உள்ளவர்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அவர் இன்று விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

02

# எனக்கும் 5 மில்லியன் அமெரிக்க டொலரை இலஞ்சமாக வழங்க அன்று முயற்சித்தனர்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பரபரப்பு தகவல்

“நான் பிரதமராக இருந்தபோது எனக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலஞ்சமாக வழங்க முயற்சித்தனர். அதனை நான் மறுத்துவிட்டேன். இலஞ்சம் மற்றும் ஊழல் முழு நாட்டையும் அழிக்கும்.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பட்டயக் கணக்காளர்களின் 45ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

02





# எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் இடது கை பெருவிரலிலேயே மை!

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களின் விரலில் குறியிடுதல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளர்களின் இடது கை சிறு விரலில் அடையாளம் இடப்பட்டுள்ளமையால், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2024.10.26 ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச தேர்தலின் போது வாக்காளர்களின் இடது கை பெருவிரலில் அடையாள மிடப்படும் என அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளரின் இடது கையில் பெரு விரல் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவரது வலது கையில் உள்ள வேறேதெனுமொரு விரலில் அடையாளமிடப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் விரலில் அடையாளமிடுவது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அனுபவம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கடந்த இரண்டு வருடங்களாக என்னுடன் இணைந்து செயற்பட்டவர்கள் நாட்டை முன்னேற்றுவதற்கு மிகவும் பொருத்தமானவர்கள்.

பொருளாதார நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்பதைத் தெரிந்த தலைவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பது இன்றியமையாதது. அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, அரசில் அங்கம் வகிப்பவராக இருந்தாலும் சரி, இந்த அனுபவம் இல்லாமல், நாட்டின் இலக்குகளை அடையத் தவறவிடுவார்கள்.

அனுபவம் வாய்ந்த எங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து முன்னோக்கிச் செல்வதற்கு அனுபவமுள்ளவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும்.

நாட்டின் எதிர்காலம் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேசத்தின் மீட்சியை உறுதி செய்வதற்கும் சரியான திறன்களைக் கொண்ட தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய அரசியல் குழுக்களின் பிரதிநிதிகளின் பரந்த ஆதரவுடன் 'காஸ் சிலிண்டர்' சின்னத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எனது தலைமைத்துவத்தை முன்னிலைப்படுத்திய இந்தக் கூட்டணி தொடர்ந்தும் வலுவாக இருக்கும்.

என்னுடன் பணியாற்றிய எம்.பிக்கள் மற்றும் ஐ.தே.க. நிர்வாகிகளில் ஒரு பகுதியினர் இப்போது 'புதிய ஜனநாயக முன்னணி'யின் கீழ் இந்தத் தேர்தலில் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களின் அனுபவம் மற்றும் அர்ப்பணிப்புடன், இந்தப் புதிய நாடாளுமன்றப் பதவிக் காலத்தின் வெற்றியை உறுதி செய்வார்கள்.

இந்த முக்கியமான காலக்கட்டத்தில் தேசத்தை வழிநடத்தும் நிபுணத்துவம் கொண்ட வேட்பாளர்களுக்கு தமது பெறுமதியான வாக்களிக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றுள்ளது.

## எனக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நான் பிரதமராக இருந்தபோது எனது அரசில் இருந்த இளைய அமைச்சர் ஒருவரின் கணவரால் ஐந்து மில்லியன் டொலர்கள் நாடாளுமன்றத்தில் எனது மேசைக்குக் கொண்டு வரப்பட்டது. "அதை எடுத்துக்கொண்டு இப்போது வெளியேறு. நான் உன்னைக் கைது செய்ய உத்தர விடுவேன்" என்று நான் சொன்னேன். அந்த நபருடன் சிங்கப்பூர் தொழிலதிபர் ஒருவரும் இருந்தார்.

ஊழலுக்குப் பழக்கப்பட்ட பெரியவர்களின் மனதை மாற்றுவது சாத்தியமில்லை. எனவே, சிறு வயதிலிருந்தே விழுமியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம்.

எங்களில் ஒரு ஜனாதிபதி இருந்தார், அவர், "உங்களால் முடிந்த வரை திருடுங்கள், ஆனால் பிடிபடாதீர்கள்" என தனது அமைச்சரவையில் தெரிவித்தார். இதை அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களிடமும் கூறி வந்தார்.

எல்லோரும் திருடினார்கள், யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த அமைப்புதான் எமது நாட்டைச் சீரழித்துள்ளது.

தொழிலதிபர்கள் அவர்களின் திட்டங்களைப் பாதுகாக்க இலஞ்சம் கொடுக்கலாம் என்றாலும், பரவலான ஊழல் இறுதியில் நாட்டையே வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்லும்.

நீங்கள் உணராதது என்னவென்றால், நீங்கள் ஒரு திட்டத்துக்காக ஒருமுறை அல்லது இரண்டு முறை இலஞ்சம் பெறலாம். ஆனால், அதுவே முழு நாட்டின் நடைமுறையாக மாறும்போது நாடே அழியும்." – என்றார்.

## பஸ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் நிலையத்தினுள் ஒருவர் இறந்து தரையில் சடலமாகக் கிடக்கின்றார் என்று நுவரெலியா மாநகர சபை ஊழியர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரும் அவருடன் இன்னுமொரு பெண்ணும் கடந்த 5 நாட்களுக்கு முன்பிலிருந்து நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில் யாசகம் பெற்று வந்தனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும், அதிக குளிர் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது குறித்து

# வவுனியாவில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்

(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது குறித்து தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெடுக்கப்பட வேண்டிய பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக அங்கத்தவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டதுடன், மாவட்ட மற்றும் பிரதேச கட்டமைப்புக்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க கலந்துகொண்டதுடன், வன்னி மாவட்ட வேட்பாளர்கள், உறுப்பினர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.













# தமிழரின் குரலாக ஓங்கி ஒலிப்பவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்!

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் மயூரன் அறிக்கை



(கி.வசந்தன்)

"தெற்கில் ஏற்பட்ட மாற்றத்துக்கான அலையில் தமிழ் மக்கள் சிக்கிவிடாது தமிழ்ப் பிரதேசங்களின் இருப்புக்களையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர வேண்டும். தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கும் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டிய அவசியம் தொடர்பில் தாயக மக்களும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ்ச் சொந்தங்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடகக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தெற்கில் இன்று அரசியல் மாற்றம் ஒன்று உருவாகியுள்ளது. அந்த மக்கள் மாற்றம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்து அநுரவை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர். வடக்கு – கிழக்கிலும் அவ்வாறான ஒரு மாற்றம் வரவேண்டும் என்று பலரும் சிந்திக்கின்றார்கள். அந்த மாற்றத்துக்குள் பல விடயங்கள் இருக்கின்றன.

நாடு பொருளாதாரச் சிக்கல்களுக்கு முகம் கொடுத்து ஊழல்வாதிகளால் சூறையாடப்பட்டுள்ளது. அந்தவகையில் நாட்டில் ஒரு புதிய யுகத்தை ஏற்படுத்துவதற்காக சிங்கள மக்கள் ஒன்றிணைந்துள்ளனர். அதனை நாம் வரவேற்கின்றோம். அதற்கான பங்களிப்புக்களை வழங்குவதற்கு நாங்களும் தயாராக இருக்கின்றோம்.

இதேவேளை, தெற்கு சிங்கள மக்கள் விரும்புகின்ற மாற்றமும் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும் ஒன்றல்ல. இரண்டையும் நாம் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. இலஞ்சத்தையும் ஊழலையும் அகற்றினால் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியுமா? அல்லது அதனை மாத்திரம் நாம் மாற்றம் என்று கூற முடியுமா?

இன்று வடக்கு – கிழக்கு தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப்பரம்பல் செயற்பாடுகள் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமகாலத்தில் திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதே கடினம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திலும் இந்த நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, தமிழ் மக்களின் இருப்பையும் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவர் முன்னும் இருக்கின்றது. இது தொடர்பாக நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஏற்கனவே அதிகளவான தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ளமையால் தமிழ் பிரதிநிதித்துவம் குறைவடைந்து செல்லும் நிலைமையைக் காண்கின்றோம். இந்தநிலையில் மாற்றத்தை விரும்பி நீங்கள் அளிக்கின்ற வாக்குகளால் எமது பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து சிங்களப் பிரதிநிதிகளே நாடாளுமன்றத்துக்குச் செல்வர். அவர்களுக்குத் தமிழர்களின் பிரதான பிரச்சினைகளே தெரியாது. அவர்கள் எமக்காகப் பேசுவார்கள் என நம்ப முடியுமா?

நாம் ஈழ விடுதலைப் போராட்டத்தில் எத்தனை ஆயிரம் போராளிகளை இழந்துவிட்டோம். எத்தனை உயிர்களை இழந்திருக்கின்றோம். பலர் அங்கவீன முற்று அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை. இவை தொடர்பாக சிங்களப் பிரதிநிதிகளால் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க முடியுமா? அல்லது அவர்களால் சர்வதேசத்துக்குத்தான் தெரியப்படுத்த முடியுமா.

இந்த நிலைமையில் நாம் தேசிய கட்சிகளுக்கு அளிக்கின்ற வாக்கானது அவர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதுடன் 50 வருடங்களுக்கு மேலாக நீடித்து வரும் விடுதலை வேட்கையை நீர்த்துப் போகச் செய்யும் நிலையை ஏற்படுத்தும்.

எனவே, தெற்கில் ஏற்பட்ட மாற்றத்துக்கான அலையில் தமிழ் மக்கள் சிக்கிவிடாது தமிழ்ப் பிரதேசங்களின் இருப்புக்களையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர வேண்டும். தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கும் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டிய அவசியம் தொடர்பில் தாயக மக்களும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ்ச் சொந்தங்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

தொடர்ச்சியான தேர்தல்களில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் சலுகை அரசியலைப் புறம் தள்ளி உரிமை அரசியலைப் பேசுகின்ற தமிழ்த் தேசிய கட்சிகளுக்கே தமது ஏகோபித்த ஆதரவை வழங்கி வந்திருக்கின்றனர்.

எனவே, இந்தத் தேர்தலிலும் தடம்மாறாது தமிழ்த் தேசியத்தின் இருப்பைப் பாதுகாப்பதற்கு ஒற்றுமையோடு அணிதிரள வேண்டும்என்று தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்."

– என்றுள்ளது.

# இலங்கைக்கு வந்து குவியும் இந்திய சுற்றுலாப் பயணிகள்

இந்த மாதத்தின் முதல் 13 நாட்களில் 55 ஆயிரத்து 353 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இதன்படி, குறித்த காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து 16 ஆயிரத்து 163 பேரும், சீனாவிலிருந்து 3 ஆயிரத்து 963 பேரும், பிரித்தானியாவிலிருந்து 3 ஆயிரத்து 926 பேரும் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.





# வடமராட்சி வடக்கு பண்பாட்டுப் பெருவிழா!



வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நேற்று (16) புதன்கிழமை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பருத்தித்துறை ஓராம் கட்டை சந்தியில் இருந்து விழா மண்டபம்வரை அழைத்து வரப்பட்டனர். அவர்களை தொடர்ந்து மாணவர்கள், பிரதேச கலைஞர்களின் இன்னியம், சிலம்பம், காவடி, கரகம், தவில், உடுக்கடி என்பன இடம்பெற்றன. தொடர்ந்து கடல்வளம், பனை வளம், தமிழரின் பாரம்பரியம், தொல்பொருள் சின்னங்கள், விவசாயம் போன்ற ஊர்திகளும் காட்சிக்கு பவனியாக வந்தன.

அணிவகுப்புக்கள் விழா மண்டபம் வரை சென்றதை அடுத்து மங்கல சுடர்கள் ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கல சுடர்களை நிகழ்வின் பிரதம விருந்தினரும், யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தருமான சிறி சற்குணராசா, நிகழ்வின் தலைவரும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலருமான சிவபாதசுந்தரம் சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களான பிரதி பிரதேச செயலர் பசுபதி தயானந்தன், நிகழ்வின் வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் சு.சுபாஸ்கரன், யாழ். மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி க. விஜயரத்தினம், நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்ட மூத்த கலைஞர்களும் , வடமராட்சி வடக்கு கலாசார பேரவை உறுப்பினர்களான இ. ஆழ்வாப்பிள்ளை, ஆ.வடிவேல் உட்பட பலரும் ஏற்றி வைத்தனர்.

நிகழ்வில் செம்பருத்தி இதழ் 2 வெளியீடு இடம் பெற்றது. இதில் வெளியீட்டு உரையைக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன் நிகழ்த்தியதை தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச கலைஞர்கள், பரிதேச மக்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், வடமராட்சி வடக்கு பிரதேச மக்கள் என் பலரும் கலந்து கொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மக்களுக்குப் புரியாத விடயம்

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பதவிக்காலம் இன்னும் நான்கு, ஐந்து நாள்களில் ஒரு மாதத்தைப் பூர்த்தி செய்ய இருக்கின்றது.

இதற்கு முந்திய ஜனாதிபதி தேர்தலில் - 2019 இல் - வரலாற்றுப் பெருவெற்றியை ஈட்டினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. 69 லட்சத்துக்கு அதிகமானோர் அவருக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினர்.

அதற்கு முன்னர் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் அவரைப் பெருவெற்றியுடன் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கான சூழமைவைத் தந்து நின்றன. அது பகிரங்க இரகசியம்.

அதனால் அந்தக் குண்டுத் தாக்குதல் பற்றிய - அதன் பின்புலத்தில் இடம்பெற்ற நகர்வுகள் பற்றிய - உண்மைகள் வெளியாக வேண்டும் என்ற அரசியல் அழுத்தம் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்தக் குண்டு தாக்குதல் பின்னணி பற்றிய முழு விடயங்களையும் பகிரங்கப்படுத்துவோம் என்று நாட்டு மக்களுக்கும், இந்த விடயத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பான கிறிஸ்தவ மக்களின் மதத் தலைவர்களுக்கும் அநுரகுமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி திரும்பத் திரும்ப உறுதிமொழி வழங்கி வந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் நடத்தப்பட்ட புலன் விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் கூட இன்னும் சரியாக வெளிவரவில்லை. ஆணைக்குழுக்கள் நடத்திய விசாரணைகளில் கூட சில பகுதிகள் வெளியிடப்படவில்லை என்பது சர்ச்சைக்குரிய விவகாரமாகத் தொடர்கின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் அநுரகுமார திஸாநாயக்கவின் அரசு பதவியேற்று ஏறத்தாழ ஒரு மாதம் கடக்கின்ற சூழலில் இந்தக் குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கைகளை இந்தப் புதிய அரசும் அம்பலப்படுத்தாமல் அமுக்கி வருகின்றது என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து வெளியாகி உள்ளது.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் தமக்கு மேற்படி குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான இரண்டு விசாரணை அறிக்கைகள் முழுமையாக கிடைத்துள்ளன என்றும், அவற்றை அரசு தானாகப் பகிரங்கப்படுத்தத் தவறுமானால் தாமே அவற்றைப் பகிரங்கப்படுத்துவார் என்றும் பிவித்துரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில்ல அறிவித்திருக்கிறார்.

இந்தக் குண்டுத் தாக்குதல் பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்துவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்து, அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மேற்படி அறிக்கைகளைத் தான் வெளியிட்டு அம்பலப்படுத்துவதை விடுத்து, அந்த அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்த போகிறார் என சவால் விடுத்திருக்கும் உதய கம்மன்பில்லவை உத்தியோகபூர்வ இரகசியங்கள் தொடர்பான சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்வது குறித்து ஆராய்ந்து வருகிறது என உதய கம்மன்பில்லயே குற்றம் சாட்டி இருக்கிறார்.

அதை உறுதிப்படுத்துவது போல உதய கம்மன்பில்ல தம் கைவசம் வைத்திருப்பதாகக் கூறும் அறிக்கைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கு மூன்று நாள்கள் காலக்கெடு விதித்து அறிவிப்பு விடுத்திருக்கிறார் அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர் விஜித்த ஹேரத்.

இந்த அறிக்கைகளில் ஒன்று - நாட்டின் புலனாய்வுத் துறையான எஸ்.ஐ.எஸ் மற்றும் இராணுவத்தின் புலனாய்வு இயக்குநரகம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு நாட்டின் உளவுத்துறை சேவைகள் செயல்படுவது தொடர்பானது.

மற்றையது - மேற்படி குண்டுத் தாக்குதல்களை தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பு மூலம் முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயே ஏற்பாடு செய்தார் என்று சனல் - 4 செய்தி நிறுவனம் பகிரங்கப்படுத்திய குற்றச்சாட்டு பற்றிய விசாரணை அறிக்கை எனத் தெரிகிறது.

இந்த விசாரணை அறிக்கைகள் உட்பட இவ்விடயத்தில் நடந்த உண்மைகள் யாவற்றையும் வெளிப்படுத்துவோம் என்று பகிரங்கப்படுத்தி அதிகாரத்துக்கு வந்தவர்கள் - அதற்கு முன்னர் கடந்த ஐந்து ஆண்டுகளாக அதிகாரத்திலிருந்தோர் இந்த விடயங்களைப் பகிரங்கப்படுத்தாமல் அரசியல் லாபங்களுக்காக மறைத்து வருகிறார்கள் என்று அவ்வப்போதும் தீவிரமாகக் குற்றம் சாட்டி வந்தவர்கள் - இப்போது தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அந்த விடயங்களை வெளிப்படுத்தாமல், விடயங்களை வெளிப்படுத்த முயலும் தரப்புகளை அடக்க முயலும் எத்தனத்தில் ஈடுபடுவது ஏன் என்பது புரியாமல் இருக்கின்றது.

இவ்விடயத்தில் முன்னைய ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தவறிழைத்தனர் என்ற சாரப்பட இவ்வளவு காலமும் குற்றம் சுமத்தி வந்த ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியினர் இப்போது தாமும் அதே பாணியை - போக்கை - கைக்கொள்ள முயல்வது ஏன்?

அதிகாரத்துக்கு வந்ததும் இந்த விடயங்களை அம்பலப்படுத்தாமல் மூடி மறைக்கச் செய்வதற்கு இந்தத் தரப்பினரும் முயற்சிப்பது எதற்காக?

மக்களுக்கு புரியாத விடயம் இதுதான்!



# சங்குச் சின்னத்தில் போட்டியிடும் அம்பாறை வேட்பாளர் அறிமுகம்

(பாறுக் ஷிஹான்)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்கு சின்னத்தில் போட்டியிடும் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நேற்று புதன்கிழமை (16) காரைதீவு கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ரெலோ , ஈ.பி.ஆர்.எல்.எப், புளட், ஈரோஸ் ஜனநாயக முன்னணி , ஜனநாயக போராளிகள் அமைப்பு ஆகிய கட்சிகளின் அம்பாறை மாவட்ட தலைவர்கள்,முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அம்பாறை இணைப்பாளர் கென்றி மகேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் வேட்பாளர்கள் அறிமுகம் இடம் பெற்றதுடன் வேட்பாளர்கள் கட்சி முக்கியஸ்தர்களின் உரைகளும் இடம் பெற்றன.

01 கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை, 02 கிருஸ்ணபிள்ளை லிங்கேஸ்வரன், 03 தியாகராசா கார்த்திக், 04 பாலசுந்தரம் பரமேஸ்வரன், 05 ராஜகுமார் பிரகாஜ், 06 சபாபதி நேசராசா, 07 சிந்தாத்துரை துரைசிங்கம், 08 சுப்ரமணியம் தவமணி, 09 செல்லத்தம்பி புகனேஸ்வரி,10 சோமசுந்தரம் புஸ்பராசா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.



# தேர்தல் கண்காணிப்பு தொடர்பான செயலமர்வு


(நவாஸ், றஹ்மான்)

இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'வியூ' அமைப்பின் பிராந்திய கண்காணிப்பு குழுவினர் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான தேர்தல் கண்காணிப்பு தொடர்பான அறிவூட்டும் செயலமர்வு நேற்று (16) அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவு சங்கக் கேட்போர் கூடத்தில் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சாஹிரா இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றது.

இதில் 'உங்களுடைய வாக்கு நாட்டின் எதிர்காலமாகும்' எனும் தொனிப் பொருளில் அமைப்பின் ஆலோசகரும் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான மஹிந்த தேசப்பிரிய தெளிவுரை வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்வில் வொய்ஸ் ஒப் ரைட் அமைப்பின் பணிப்பாளர் அருள் நாயகம் தர்ஷிக்காவும் கலந்து கொண்டார்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# அக்கரைப்பற்றில் டெங்கு ஒழிப்பு உள்ளக ஒருங்கிணைப்புக் கூட்டம்

(றிஸ்வான் சாலிஹு )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கமைவாக நேற்று புதன்கிழமை (16) அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு உள்ளக ஒருங்கிணைப்புக் கூட்டம் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.முனவ்வர் தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு நுளம்பு பரவும் நிலை ஆரம்பித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் சுமார் 555 டெங்கு நோயாளர்களும் (இதில் 02 பேர் மரணம்), 2023 ஆம் ஆண்டு 279 நோயாளர்களும் இவ்வருடத்தில் இதுவரை 62 பேரும் டெங்கு நோயாளர்களும் இனங்காணப் பட்டுள்ளனர்.



இந்த ஆண்டில் இந்த எண்ணிக்கையோடு இக்கொடிய நோயை இல்லாமல் ஒழிக்கும் முகமாக நாளை மறுதினம் சனிக்கிழமை (19) டெங்கு அதிகமாக பரவக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுகின்ற பிரதேசங்களில் பாரிய சிரமதான நடவடிக்கைகளும் கள பரிசோதனையும் நடத்தப்பட வுள்ளன.

நாம் எதிர் நோக்கின்ற சவால்களை இல்லாமல் செய்வதற்கும் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.முனவ்வர் அங்கு கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேச உதவி செயலாளர் றாசீத் யஹ்யா, கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ. எம்.பஸால், மாநகர சபை வைத்திய அதிகாரி டாக்டர் சபீனா ஹம்தூன், ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர் உட்பட அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உலமா சபை தலைவர், இளைஞர் கழகங்கள், விளையாட்டு கழகங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாடு!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான 4 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு தொழில்நுட்பவியல் பீட பிரதான கேட்போர் கூடத்தில் நேற்று (16) மாநாட்டின் தலைவரும் பதில் உப வேந்தரும் பீடாதிபதியுமான கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

ஆய்வு மாநாட்டை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழினுட்பவியல் பீடம் ஏற்பாடு செய்திருந்தது.

மாநாட்டின் இணைப்பாளரும் பயோ சிஸ்டம் தொழில்நுட்பத் துறையின் தலைவருமான கலாநிதி முனீப் எம். முஸ்தபாவின் வழிகாட்டலில் ஐசிஎஸ்ரி 2024 செயலாளர் ஏ.ஆர். பாத்திமா ஷபானாவின் நெறிப்படுத்தலில் “நிலையான எதிர்காலத்துக்கான நவீன தொழில்நுட்பங்கள் மூலம் புதுமையான எல்லைகளை ஆராய்தல்” எனும் தொனிப்பொருளில் மாநாடு இடம்பெற்றது.



மாநாட்டுக்கு விசேட பேச்சாளர்களாக பிரிட்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டிலாந்தி அமரதுங்க மற்றும் தாய்லாந்தின் பேராசிரியர் சாக்லாம் சில்பசுவாஞ்சை ஆகியோர் நிகழ்நிலையூடாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்த ஆய்வு மாநாட்டுக்கு 81 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 52 கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன. நிகழ்வில் நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் புத்தளம் மாணவருக்கு உதவி

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் புத்தளம் மணவர்களுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் சென். மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பல்லின மதங்களை சேர்ந்த தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான 175 மாணவர்களுக்கு 74 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவு கொண்டுசெல்லும் சில்வர் சாப்பாட்டுப் பெட்டிகள், மற்றும் சிற்றுண்டி வகைகளும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.ஜெனட் ரொட்ரிகோ புள்ளே தலைமையில் இடம்பெற்றது.

இதேவேளை, புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணல்குன்று, அபயபுர பிரதேசங்களில் வாழும் பல்லின சமூகங்களை சேர்ந்த புத்தளம் இந்து மத்திய கல்லூரி, சென். மேரிஸ் மகா வித்தியாலயம், சென். என்றூஸ் கல்லூரி, மணல்குண்டு வித்தியாலயம், செய்னப் முஸ்லிம் கல்லூரி, ஆனந்த மத்திய கல்லூரி, சாஹிரா தேசிய பாடசாலை, தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் கல்விகற்கும் தெரிவு செய்யப்பட்ட 63 மாணவர்களுக்கு



1லட்சத்து 36 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு சமூகசேவையாளரும், கருமாரியம்மன் ஆலய ஸ்தாபகருமன எஸ். மகேந்திரன் தலைமையில் சேனைக் குடியிருப்பு பத்தினியம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது.

இந்த உதவித் திட்டங்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான ஆச்சிரம தொண்டர்கள் நேரில் சென்று வழங்கினர்.








# யாழ். மாநகர சுகாதாரப் பிரிவில் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடு

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையை அடுத்து குடாநாட்டில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ் . மாநகர சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

யாழ். மாநகர சுகாதாரப் பிரிவால் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள், ஆலயங்கள், தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சமன் தர்மசிறீ பத்திரணவின் அறிவுறுத்தலுக்கு அமைய அவரது நெறிப்படுத்தலில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி த. தவரூபன் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளைச் செயற்படுத்தினார்.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் மருத்துவ மாதுக்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், கிராம சேவகர்கள், பிரதேச செயலர்கள், மாணவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், நலன் விரும்பிகள் ஈடுபட்டனர்.
















# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரச்சாரம் ஆலய வழிபாட்டுடன் ஆரம்பம்

(க.கிஷாந்தன்)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரசாரப்பணிகள் நேற்று (16) ஆலய வழிபாட்டுகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனின் தலைமையில் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதை தொடர்ந்து, மக்கள் சந்திப்புக் கூட்டமும் இடம்பெற்றது.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும் (அரசியல் பிரிவு) கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ராஜமணி பிரசாத், முன்னாள் உப தவிசாளர், உறுப்பினர்கள், அரசியல் அமைப்பாளர்கள், ஆலய பரிபாலன சபையினர், வர்த்தகர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்களாக அதன் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை யானை சின்னத்தில் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப் பொருளுடன் காரைதீவில் இருவர் கைது!

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை, காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவரைநேற்று புதன்கிழமை (16) மாலை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரும் சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 510 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், மற்றவரிடம் இருந்து 770 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதனையடுத்து, சந்தேக நபர்களை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காரைதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# உலக அளவில் ஒரு முக்கியம்! உலக வறுமை ஒழிப்பு தினம்!!

உலகம் முழுவதும் வறுமையை ஒழிக்கக் கூடும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக ஒக்ரோபர் 17 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக வறுமை ஒழிப்பு தினம் (International Day for the Eradication of Poverty) உள்ளது. இந்த நாளின் முக்கியத்துவம், வறுமையால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், அவர்களுடைய உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை உறுதிப்படுத்தவும் மையமாகிறது.

1992ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை அதிகார பூர்வமாக அறிவித்தது. இந்த தினத்தின் நோக்கம், உலகளாவிய அளவில் வறுமையை ஒழிக்க பிரச்சாரங்களைத் தொடங்கவும், வறுமை என்பது சமூகத்தின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகவும் இருப்பதை ஒவ்வொரு நாட்டினரும் உணர வைப்பதுமாகும்.

**உலக வறுமை ஒழிப்பு தினம் உருவாக்கப்பட்ட பின்னணி**

1987 ஆம் ஆண்டு, பிரான்சில் ஜோசப் வைரின்ஸ்கி என்ற சமூக செயற்பாட்டாளர், வறுமை மற்றும் உதவியற்ற நிலையிலுள்ள மக்களின் சவால்களை உலகம் முழுவதும் அனைவரும் உணர வேண்டியது அவசியமான ஒன்றாகக் கருதினார். அதன்படி, ஜோசப் இப்போட்டுடன் ஒரு நிகழ்வை நடத்தினார். அதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கேற்று வறுமை ஒழிப்பு நோக்கத்தை முன்வைத்தனர். இந்த விழாவின் முக்கிய உரை, பாரிசில் உள்ள மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உறுதிப்படுத்தும் கல்லறையில் நடைபெற்றது. இது பின் உலக அளவில் ஒரு முக்கிய நிகழ்வாக மாறியது.

இந்த நிகழ்வின் வெற்றியை அடுத்து, 1992 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபை, ஒக்ரோபர் 17 ஆம் திகதியை உலக வறுமை ஒழிப்பு தினமாக (International Day for the Eradication of Poverty) அதிகார பூர்வமாக அறிவித்தது.

வறுமை என்பது முறைமை, பொருளாதாரம், சமூகம், மற்றும் அரசியல் குறியீடுகளில் உள்ள பல வேறு குறைபாடுகளால் உருவாகும். இது ஒரு மனிதனின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவரை மாற்றும். அடிப்படை தேவைகள் என்பதில் உணவு, தண்ணீர், ஆடைகள், தங்கும் இடம், கல்வி, மருத்துவம், மற்றும் பிழைப்பதற்கான பொருளாதார ஆதாரம் ஆகியவை அடங்கும்.



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை, மருத்துவ சேவைகள் கிடைக் காமல் போவது, அதிக இழப்பு மற்றும் புறக் கணிப்பு போன்றவை வறுமை யால் ஏற்படுத்தப்படுகிறது.

வறுமை என்பது ஒரு வள பிரச்சினை மட்டுமல்ல, இது நீதிமான குறைபாடு. வறுமை எதிர்கொள்ளும் மக்களின் உரிமைகள், சமூக நீதி, மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வறுமை ஒழிப்பு தினம் உலகளாவிய அளவில் பிரச்சினையை முன்னிலைப்படுத்துவதற்கான நாள் மட்டுமல்ல, அதற்காக எடுக்கப்படும் தீர்வுகளுக்கான செயற்பாடுகளையும் துவங்குவதற்கான ஒரு கட்டாயம். இந்த தினத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் கோட்பாடுகள் உள்ளன.

**வறுமை ஒழிப்பின் உரிமைகள் மற்றும் மனித கௌரவம்**

வறுமையில் இருப்பவர்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை உரிய முறையில் பெற வேண்டும் என்பதில் வலியுறுத்துகிறது. அதாவது, அவர்கள் உணவு, கற்றல், சுகாதாரம், மற்றும் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை பெறுவது மிக அவசியம்.

வறுமை என்பது தனி மனிதனின் சவாலாக மட்டும் இல்லாமல், ஒரு சமூகத்தின் சவாலை பிரதிபலிக்கிறது. வறுமையால் பாதிக்கப்படும் மக்களை ஒருங்கிணைக்க, அவர்களின் குரலை கேட்க, மற்றும் அவர்களுக்கு சம உரிமைகளை வழங்க வேண்டும் என்பதையே இந்த நாள் வலியுறுத்துகிறது.

பல நாடுகளில் இந்த தினம் உணர்வு நிறைந்த

தொடர்ச்சி▼

# உலக அளவில் ஒரு முக்கியம்! உலக வறுமை ஒழிப்பு தினம்!!

தொடர்ச்சி▲

வகையில் கொண்டாடப்படுகிறது. பல தொண்டு அமைப்புகள், அரசு நிறுவனங்கள், மற்றும் சர்வதேச அமைப்புகள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றன. மக்கள் வறுமையின் காரணம், அதை எதிர்கொள்வதற்கான தீர்வுகள் பற்றிய கருத்துக்களை பரிமாறுகின்றனர்.

வறுமையை ஒழிக்க உள்ளூரில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் கூட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசு மற்றும் தனியார் துறை, சமூக மற்றும் பொருளாதார அமைப்புகள் ஆகியவற்றின் ஒற்றுமை மூலம் தீர்வுகளை வடிவமைக்க முடியும்.

அவ்வாறு, ஐ.நா. 2030 இற்கான சுயவிவரப் பணி (Sustainable Development Goals - SDGs) அமைப்பின் முக்கிய பங்களிப்பு வறுமை ஒழிப்பு ஆகும். இந்த அமைப்பு வறுமையை ஒழிக்கவும், சமத்துவம் மற்றும் மனித கௌரவம் காக்கவும் பல்வேறு அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. SDG-1 என்பது "எங்கும் வறுமையை ஒழிப்பது" என்ற இலக்கை வலியுறுத்துகிறது.

**SDG-1 இன் முக்கிய நோக்கங்கள்**

1. 2030 இற்குள் அனைத்துத் தனிநபர்களையும் வறுமையிலிருந்து மீட்பது. ஒவ்வொரு நாட்டின் குறிப்பிட்ட பொருளாதார அளவுகளைக் கெண்டு வறுமையில் இருந்து மக்களை மீட்கும் செயல்பாடுகள்.
2. மிகவும் நலவீனமான மக்களுக்கு ஆதரவு – சமூகத்துக்குத் தங்கள் உரிமைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு உதவும் திட்டங்களை உருவாக்குதல்.
3. நீடித்த வளர்ச்சி, கல்வி, மற்றும் சுகாதாரத்துக்கு நிதி வழங்கல், சமூகத்தின் பின்தங்கிய பகுதிகளில் நீடித்த வளர்ச்சியுடன் பொருளாதார நிலைப்பாட்டை வழங்குதல்.
4. சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் – வேலைவாய்ப்பு மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.


பல நாடுகளில் வறுமை ஒழிப்பு தொடர்பான பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுகின்றன. வறுமையை ஒழிக்கவும், மனித கௌரவத்தை மேம்படுத்தவும் நவீன திட்டங்கள் உலகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில், விவசாயிகளுக்கு சிறிய அளவிலான நிதி உதவிகளை வழங்குவதன் மூலம், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில், வறுமையில் வாழும் மக்களுக்கு அடிப்படை தேவைகளை வழங்குவதற்காக நெறிமுறை மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இது சுகாதாரம், கல்வி, மற்றும் நீடித்த பொருளாதார நெருக்கடியை குறைப்பதற்காக செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு நாடுகளில், வறுமையில் இருப்பவர்களுக்கு உதவிடும் பல சமூக பாதுகாப்பு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, இலங்கையில் சமூகப் பாதுகாப்பு நிதி உதவி திட்டங்கள் மற்றும் பல திட்டங்கள் செயல்படுகின்றன.

தனிநபர் அல்லது சமூகங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையைக் குறிக்கிறது. உணவு, குடி தண்ணீர், ஆடை, தங்குமிடம்,




கல்வி, மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை ஆதாரங்களைப் பெற முடியாத நிலை வறுமையின் பிரதான வெளிப்பாடாகும்.

வறுமை பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது, குறிப்பாக பொருளாதாரச் சீர்கேடு, கல்வியறிவு பற்றாக்குறை, அரசியல் நிலைமைகள், வேலை வாய்ப்பின்மை, மற்றும் பொருளாதார சீரமைப்புகள் ஆகியவை இதற்கு முக்கிய காரணமாக உள்ளன.

வறுமையின் விளைவுகள் சமூகத்தில் தீமைகளை ஏற்படுத்துகின்றன. வறுமையில் உள்ள மக்கள் அடிப்படை சுகாதார வசதிகளைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் நோய்கள், ஊட்டச்சத்து குறைபாடுகள், மற்றும் பிற உடல் நலப் பிரச்சினைகள் அதிகமாகின்றன. மேலும், வறுமை குற்றச்செயல்கள் அதிகரிக்கவும், சமூகத்தில் சமத்துவம் இல்லாத நிலையை ஏற்படுத்தவும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

வறுமை ஒழிப்பு என்பது ஒவ்வொரு நாட்டுக்கும் முக்கியமான சவாலாகும். இதற்கான தீர்வுகள் அதிகப்படியான கல்வி வாய்ப்புகளை வழங்குதல், வேலை வாய்ப்பின்மையை குறைப்பது, சமூக பாதுகாப்பு திட்டங்களை மேம்படுத்துவது போன்றவற்றின் மூலம் செய்ய முடியும். சீரிய திட்டங்கள் மற்றும் நீடித்த முயற்சிகள், வறுமையை குறைத்து, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு வழிவகுக்கும்.

உலக வறுமை ஒழிப்பு தினம், வறுமையின் காரணமாக பாதிக்கப்படும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவசியங்களை உலகம் முழுவதும் உணர வைப்பதற்கான முக்கிய நாள் ஆகும்.

வறுமையை ஒழிக்க முயலும் உலக நாடுகள், சமுதாய அமைப்புகள், மற்றும் தனிநபர்களை ஒன்றிணைக்கவும், அவர்கள் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கௌரவத்தைப் பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. வறுமை என்பது ஒரு பொருளாதார சவால் மட்டுமல்ல அது சமூக நீதிக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரான தாகும். இதற்காக நீடித்த நடவடிக்கைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அளவிலான பிரச்சாரங்கள் ஆகியவை மிக அவசியமானவை.

மனித கௌரவம் காக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் சம உரிமை மற்றும் நல்வாழ்வு என்பன வறுமையில் இருந்து விடுபட்டு அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

# மன்னார் இருவேறு மனித புதைகுழி வழக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!




(வாஸ் கூஞ்ஞ, எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட இரு வெவ்வேறு மனித புதைகுழி வழக்குகள் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஓரிரு கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்தில் இருந்து மாந்தை பகுதிக்கு வீதியோரமாக குடி தண்ணீர் திட்டத்துக்கு தோண்டப்பட்டபோதும் 2018 ஆம் ஆண்டு மன்னார் நகரில் சதொச விற்பனை நிலையத்துக்கான கட்டடம் அமைக்க முற்பட்டபோதும் இரு வெவ்வேறு மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை (16) மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்காக மனித புதைகுழி வழக்குகளில் முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

மன்னாரில் 2018 ஆம் கண்டு பிடிக்கப்பட்ட சதொச மனித புதைகுழி வழக்கு கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை வைத்திய கலாநிதி ராஜபக்ஷ குழுவினராலும் ராஜ்சோம தேவா குழுவினராலும் ஏற்கனவே இந்த மனித புதைகுழியிலிருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்கள் பொதி செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பொதிகளிலிருந்து மனித எச்சங்கள் தனியாகவும் இதனுடன் இந்தப் புதைக்குழியில் இருந்து எடுக்கப்பட்ட பிறப் பொருள்கள் கடந்த ஐந்து நாள்களும் பிரித்து எடக்கப்பட்டு பொதி செய்யப்பட்டன.

இந்த பிறப் பொருள்கள் ராஜ் சோமதேவாவாலும் மனித எச்சங்கள் ராஜபக்ஷவாலுமே பிரித்து எடுக்கப்பட்டு பொதி செய்யப்பட்டன.

அத்துடன் இந்நாட்களுக்குள் ராஜ் சோமதேவால் இந்த புதைகுழியை சுற்றியுள்ள பகுதிகளில் நான்கு இடங்களில் பரீட்சாத்திரமாக தோண்டிப் பார்க்கப்பட்டன. இந்த இடங்களில் தலா 110, 30 சென்றி மீற்றர் கொண்டதாக தோண்டிப் பார்க்கப்பட்டன.

இத்தினங்களில் பொதிகள் செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ள இந்த பொதிகள் தொடர்பாக நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போது இதில் அரச சட்டத்தரணி , காணாமல் போன உறவுகள் தொடர்பாக முன்னிலையாகி வரும் சட்டத்தரணிகள், காணாமல்போன சம்பந்தப்பட்ட அலுவலக உத்தியோகத்தர்களும் ஆஜராகி இருந்தனர்.

இந்த வழக்கில் நீதிமன்றால் சில கட்டளைகள் ஆக்கப்பட்டன. அதாவது வைத்திய கலாநிதி ஹேகவினால் பகுப்பாய்வு செய்யப்பட இருக்கும் மனித எச்சங்கள் இதில் இறப்புக்கான காரணம், வயது எல்லை மற்றும் பால் தொடர்பான பகுப்பாய்வு செய்து அறிக்கை செய்வதற்கு போதிய இடவசதி காணாமல் இருப்பதால் நீதிமன்றத்தால் கட்டளை ஒன்று ஆக்கும்படி கேட்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இதற்கான அறிக்கை ஒன்றை மன்றில் சமர்பிக்குமாறும் அத்துடன் ராஜசோமதேவாவும் புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பொருள்களின் கால எல்லைகள் சம்பந்தமாகவும் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் என்று மன்று கேட்டுள்ளது.

அத்துடன் இந்த சதொச மனித புதைகுழியை மீண்டும் அகழ்வு செய்யப்பட வேண்டுமா அல்லது தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமா என இது தொடர்பான அபிப்பிராயங்களையும் பேராசிரியர் ராஜசோமதேவாவாலும் சட்டவைத்தியர் ராஜபக்ஷவாலும் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்க வேண்டும் என்றும் மன்று கோரியுள்ளது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அழைக்கப்பட இருக்கின்றது. அத்துடன் இதன் பொருள்களை உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்குமாறும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு -2013 ஆம் ஆண்டு மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழி வழக்கும் நேற்று புதன்கிழமை (16) மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இவ் வழக்கில் வைத்திய கலாநிதி வைத்தியரத்தினாவும் குற்றத்தடுப்பு பாதுகாப்பு அதிகாரிகளும் காணாமல் போன உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையாகி வரும் சட்டத்தரணிகளும் அரச சட்டத்தரணியும் மன்றில் இவ்வழக்கில் முன்னிலையாகி இருந்தனர்.

இவ் மனித புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்டு பின் பகுப்பாய்வுக்காக பிரித்து பொதி செய்யப்பட்டிருக்கும் மனித எச்சங்கள் நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை சீ 14 பரிசோதனைக்காக புளோரீடா அன்ரோபோலஜி நிறுவனத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை தொடர்பாக வைத்தியரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நீதிமன்றால் கட்டளை ஆக்கப்பட்டுள்ளது. வைத்திய கலாநிதி ஹேவேவினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் அறிக்கைகள் இன்று (16) மன்றில் சமர்ப்பிக்க இருந்தது.

ஆனால் இவர் நீதிமன்றில் இன்று (16) சமூகமளிக்காமையால் இந்த அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி தாக்கல் செய்யப்படுவதற்கு தவணை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த பிரித்தெடுக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பாகவும் எதிர்வரும் தவணையில் அறிவிக்கப்பட இருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அழைக்கப்பட இருக்கின்றது.- என்றார்.



# சம்மாந்துறை ஊடக மையத்துக்கு முன்னாள் தேர்தல் ஆணையர் வருகை

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை ஊடக மையத்துக்கு நேற்று (16) புதன்கிழமை சென்றார் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய. இவர் சம்மாந்துறை கலாச்சார மண்டபத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.

இந்த நிகழ்வில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.தேர்தல் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு விஷேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை ஊடக




மையத்தின் சிரேஷ்ட ஆலோசகர் காமில் இம்டாட் உட்பட டி.வை.ஆர்.எவ். மற்றும் வியூ நிறுவனத்தின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

# கட்சியைப் பாதுகாக்கும் தலைமைத்துவம் ரிஷாத்திடம் இல்லை என்கிறார் மஹ்ரூப்!

(ஏ.எச். ஹஸ்பர்)

கட்சியை பாதுகாக்க கூடிய தலைமைத்துவம் ரிஷாத்திடம் இல்லை என புதிய ஜனநாயக முண்ணனியின் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இருந்து நான் நாடாளுமன்ற தேர்தலில் பங்கு கொள்கின்ற போது, அதுக்கு முன்னர் 1988 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்ட போது, கடைசியாக நாம் பங்குகொண்ட 2020 ஆம் ஆண்டு தேர்தலிலும் முதல் தேர்தலில் 35,555 வாக்குகளை பெற்றேன்.

2014 ஆம் ஆண்டு 35700 வாக்குகளையும் இருபதாம் ஆண்டு தேர்தலில் 37ஆயிரம் வாக்குகளையும் பெற்றேன்.

தற்போது நடைபெற போகின்ற தேர்தலிலே என்னுடைய வாக்கு என்ற கேள்வியை முன் வைத்திருக்கின்றீர்கள்.

88 ஆம் ஆண்டு தேர்தலில் இருந்து 20 ஆம் ஆண்டு தேர்தல்வரை பல கட்சிகளில் என்னை பிரதிநிதித்துவம் படுத்தினாலும் எனது வாக்குகள் 35 ஆயிரம் வாக்குகளுக்கு குறையவில்லை என்பதை மாகாண சபை, நாடாளு மன்றம் என்பன உறுதிப்படுத்தி இருக்கின்றன.

என்னோடு சேர்ந்து போட்டியிடுகின்றவர்கள் அந்தச் சின்னத்தில் விருப்பு வாக்குகளைப் பெறுகின்ற போது நாலாயிரம் ஐயாயிரம் விருப்பு வாக்குகள் அவர்களுக்குத் தனித்து விழுந்தன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். எஸ்.தவ்பிக், இம்ரான் மஃரூப் போன்றவர்களுக்கு அது கிடைக்காது.

நான் புதிய ஜனநாயக முன்னணியினுடைய தலைமை வேட்பாளராக சிலிண்டர் சிங்கத்தில் கேட்கின்றேன். எங்களுடைய கட்சி தினேஷ் குணவருத்தனவினுடைய மக்கள் கட்சி. துமிந்த திசா நாயக்க போன்றவருடைய ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, தேசிய காங்கிரஸ், அதாவுல்லா பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய கட்சிகளுடைய கூட்டமைப்பு தான் இந்த புதிய ஜனநாயக முன்னணி கட்சி. இதில் நான் ரணில் விக்ரமசிங்க அவருடைய கட்சியிலே வேட்பாளராக போட்டியிடுகின்றேன்.

இம்முறை பொதுத் தேர்தலில் இரண்டு தலைமைகளும் முழுமையாக நிராகரிக்கப்படுகின்ற போது இந்த மாவட்டத்தில் போனஸ் ஆசனங்களுடன் இரண்டு ஆசனங்களை எனது தலைமையில் புதிய ஐக்கிய முன்னணி பெறப்போகின்றது என்ற உண்மையை கூறுவது மட்டுமல்லாமல் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுடைய வாக்குகளைப் பெரும்பான்மையாக பெறக் கூடிய வாய்ப்பு எனக்கு இருக்கிறது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.– என்றார்.



# தமிழகம் முழுவதும் கனமழையால் வெள்ளம் 891 குளங்கள் நிரம்பின

தமிழகத்தில் பரவலாக கனமழை பெய்து வரும் நிலையில், மாநிலம் முழுவதும் உள்ள 90 அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் சுமார் 60 சதவீதம் நீர்இருப்பு உள்ளது. 38 மாவட் டங்களில் உள்ள மொத்த ஏரிகளில் 891 குளங்கள் முழுவதுமாக நிரம் பியுள்ளன.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்டது. தொடங்கியது முதலே கனமழை பெய்து வருகிறது. இதனால், அணைகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஏற் கெனவே நிரம்பியுள்ள நீர்நிலைகளுக்கு வரும் தண்ணீர் உபரி நீராக அப்படியே வெளியேற்றப்படுகிறது. உபரிநீர் வெளியேறும் நீர்நிலைகளை உன் னிப்பாக கண்காணிக்க அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

# தொகுதி பொறுப்பாளர்களுக்கு நாளை அரசியல் பயிலரங்கம்

## த.வெ.க. அறிவிப்பு



த.வெ.க. முதல் மாநில மாநாட்டு குழுக்கள் மற்றும் தற்காலிக தொகுதிப் பொறுப்பாளர்களுக்கு நாளை சேலம் மாவட்டம் ஆத்தூரில் அரசியல் பயிலரங்கம் மற்றும் மாநாட்டு பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நமது கட்சித் தலைவரின் அறிவுறுத்தல்படி, நமது முதல் மாநில மாநாடான வெற்றி கொள்கைத் திருவிழா குறித்து, மாநாட்டு குழுக்கள் மற்றும் தற்காலிகத் தொகுதிப் பொறுப் பாளர்களுக்கு அரசியல் பயிலரங்கம் மற்றும் மாநாட்டுப் பணிகளுக்கான குழுக்களின் நெறிமுறைகள் குறித்த கலந்தாய்வு, சேலம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள அம்மம் பாளையம் கொங்கு திருமண மாளிகையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த பயிலரங்கில் அரசியல் திறனாய்வாளர்கள் கலந்துகொண்டு, இதுவரை தமிழகத்தில் நடந்த மாநாடுகள் குறித்த பார்வை, கொள்கைகள் மற்றும் கருத்தியலை அணுகும் முறை, சமூகப் பொறுப்புணர்வு, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் மாநாட்டைச் சிறப்பிப்பது, வெற்றிக் கொள்கைத் திருவிழா - விளக்கவுரை மற்றும் மாநாட்டுக் குழுக்கள் கலந்தாய்வு எனும் தலைப்புகளில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

எனவே, இந்த கலந்தாய்வில் அனைத்துக் குழுக்களின் தலைவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தமிழக, புதுச்சேரி மாநிலங்களின் தற்காலிகத் தொகுதிப் பொறுப் பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண் டும்.” - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் 6 விமானங்கள் ரத்து



சென்னையில் கனமழை எச்சரிக்கை, பயணிகள் குறைவாக இருந்ததால் 6 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. சென்னையில் கனமழை, போதிய பயணிகள் இல்லாதது போன்ற காரணங்களால் நேற்று முன்தினம் 12 விமானங்களின் சேவைகள் ரத்து செய் யப்பட்டது.

2 ஆவது நாளாக நேற்று சென்னையிலிருந்து காலை 6:55 மணிக்கு மதுரை செல்ல வேண்டிய இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம், காலை 10:35 மணிக்கு சேலம் செல்ல வேண்டிய இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம், பிற்பகல் 2:40 மணிக்கு சீரடி செல்ல வேண்டிய ஸ்பைஸ் ஜெட் ஏர்லைன்ஸ் விமானம் ஆகியவை ரத்தாகின.

அதேபோல், மதுரையிலிருந்து காலை 10 மணிக்கு சென்னை வர வேண்டிய இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம், சீரடியில் இருந்து பகல் 1:40 மணிக்கு சென்னை வரவேண்டிய ஸ்பைஸ் ஜெட் ஏர்லைன்ஸ் விமானம், மாலை 6 மணிக்கு சேலத்திலிருந்து சென்னை வர வேண்டிய இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளன.




# நைஜீரியாவில் எரிபொருள் தாங்கி வெடிப்பு; உயிரிழந்தோர் எண்ணிக்கை 140 ஆக உயர்வு

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறியதில் 140 பேர் உயிரிழந்ததுடன், பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவின் ஜிகாவா பகுதியில் எரிபொருள் தாங்கியை ஏற்றிச் சென்ற பாரவூர்தி திடீரென கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது, தாங்கியிலிருந்த எரிபொருள் கசிந்து வெளியேறியுள்ளது.

அருகிலிருந்த மக்கள் பாரவூர்தியில் இருந்த தாங்கியிலிருந்து கசிந்த எரிபொருளைச் சேகரித்துள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான மக்கள் கூடியதால், எரிபொருள் பாரவூர்தி தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் 140 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.








# மலேஷியாவில் தொடரும் பாரிய மனிதக் கடத்தல்கள்

மலேஷியாவில் இடம்பெறும் பாரிய அளவிலான மனித கடத்தல் மற்றும் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்வதாக அந்த நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு ஒன்றின் போது இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்ட மதக் குழுவொன்றைச் சேர்ந்த 171 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது மனித கடத்தலுக்கு தயார்படுத்தப்பட்டிருந்த மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 402 சிறுவர்களும் மீட்கப்பட்டனர்.



கனடா முரசு

பக்கங்கள் 02

வியாழக்கிழமை 17/10/2024

## 19 ஆம் மாடியில் இருந்து தவறிவிழுந்து குழந்தை பலி

கனடாவில் உயரமான கட்டடம் ஒன்றில் இருந்து விழுந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கனடாவின் விண்ணிபெக் பகுதியில் அமைந்துள்ள அடுக்கு மாடி கட்டடம் ஒன்றில்

02



# பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மீது கனடா ஊடகங்கள் விமர்சனம்

**இந்தியாவுக்கெதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றார் என கனேடிய ஊடகங்களே கனடா பிரதமர் மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளன.**

**காலிஸ்தான் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலையில் இந்திய தூதர்கள் சந்தேக நபர்கள் என கனடா கூறியுள்ளதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவு மேலும் மோசமடைந்துள்ளது.**

இந்நிலையில், கனடா பிரதமர் நம்பத்தகுந்த எந்த ஆதாரங்களையுமே முன்வைக்காமல், இந்தியா மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும், காலிஸ்தான் அச்சுறுத்தல் தொடர்பில் தவறான தகவல்களை பரப்புவதாகவும் கனேடிய ஊடகங்களும், அரசியல் நிபுணர்களும் விமர்சித்துள்ளார்கள்.

அத்துடன், கனடா பொலிஸாரும் எந்த ஆதாரங்களையும் அளிக்காமலே, இந்தியாவுக்கெதிராக மோசமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும் கனேடிய ஊடகங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன.






# கனடாவில் தீவிரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்ட பலஸ்தீன அமைப்பு

கனடாவில், பாலஸ்தீன ஆதரவு அமைப்பு ஒன்று தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன ஆதரவு அமைப்பான சமிடோன் என்ற அமைப்பு தீவிரவாத அமைப்பாக கனடா பட்டியலிட்டுள்ளது.

கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் சமிடோன் அமைப்பினை தீவிரவாத இயக்கங்களில் ஒன்றாக பட்டியலிட்டுள்ளன.

கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லிபிளொன்க் இது தொடர்பாக அறிவித்தல் விடுத்துள்ளார்.

சமிடோன் என்ற அமைப்பு பலஸ்தீன சிறை கைதிகளுக்கு உதவும் ஓர் வலையமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கனடாவில் மற்றும் ஒரு பாலஸ்தீன விடுதலை முன்னணி என்ற அமைப்பும் ஏற்கனவே தீவிரவாத பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இந்திய துணை தூதரகங்களை மூடுமாறு சீக்கிய குழுக்கள் கோரிக்கை விடுத்தன

கனடாவில் அமைந்துள்ள இந்திய துணை தூதரகங்களை மூடுமாறு சீக்கிய குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வான்கூவார் மற்றும் டொரன்டோவில் அமைந்துள்ள இந்திய துணை தூதரகங்களை மூடுமாறு பிரிட்டிஷ் கொலம்பிய சீக்கிய ஆலய பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்த ஆலயத்தின் பிரதம குரு ஹார்திப் சிங் நிஜார் சுட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்துடன் இந்தியாவிற்கு நேரடி தொடர்பு உண்டு என அந்தக் குழுவும் கனடிய அரசாங்கமும் குற்றம் சுமத்தி இருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் அண்மைய நாள்களாக இந்த விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் பெரும் முரண்பாட்டினை உருவாக்கியுள்ளது.

இரு நாடுகளும் தங்களது நாடுகளில் சேவையாற்றி வந்த இராஜதந்திரிகளை வெளியேறிச்செல்லுமாறு உத்தரவிட்டிருந்தன.

இந்த நிலையில், சீக்கிய பிரதிநிதிகள் குழு ஒன்று நடத்திய ஊடக சந்திப்பில் இவ்வாறு துணை தூதரகங்களை மூடுமாறு கோரியுள்ளது.

# பஸ்ஸில் மோசமாக நடந்த நபரை கனடா பொலிஸார் தேடுகின்றனர்

ரொறொன்ரோவின் கோர்சோ இத்தாலியா பகுதியில் பஸ்ஸில் பயணித்தபோது, பயணிகளிடம் அநாகரீகமாக நடந்து கொண்டதாக கூறப்படும் நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேற்படி நபர் பயணிகள் மீது தவறான தொடுதல்களை மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் டஃபெரின் தெரு மற்றும் செயின்ட் கிளேர் அவென்யு வெஸ்ட் என்பனவற்றுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் மோசமாக நடந்து கொண்டதாகவும் பயணிகள் அவரை தடுக்க முயற்சித்த போதும் அவர் தப்பிச் சென்றுள்ளார்.

அவர் 40 முதல் 50 வயதுடையவர் என்றும் ஆறு அடி மூன்று அங்குல உயரம் கொண்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கடைசியாக இராணுவ பச்சை நிற ஆடை அணிந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்தேக நபர் பற்றி தெரிந்தால் 416-808-1300 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.








## 19 ஆம் மாடியில்...

இருந்து இந்த குழந்தை விழுந்துள்ளது.

வின்னிபெக் கம்பர் லேண்ட் வீதியில் இந்த கட்டடம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கட்டடத்தின் 19 ஆம் மாடியில் ஜன்னலில் இருந்து குழந்தை விழுந்து உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கட்டடத்திலிருந்து விழுந்த குழந்தை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் ஓர் விபத்து எனவும் இது எவ்வித குற்ற செயல்களும் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வின்னிபெக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.